**பிபில பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 14 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிபில பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பல்வேறு செயற்பாடுகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 110,654 பெறுமதியான முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவைக் கடை வாடகைக் கணக்கின் மீதி ரூபா 636,579 ஆக இருந்ததுடன் பேரேட்டின் பிரகாரம் ரூபா 728,335 ஆகக் கணக்கு வைக்கப்பட்டமையால் ரூபா 91,756 தொகையான கடை வாடகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2004 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை கேள்வி அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 277,986 தொகையான நிலுவை வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் அதனைக் கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான உடுபுபுல ஓய்வு விடுதியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 198,566,551 ஆக இருந்ததுடன் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 11,904,127 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 187,845,460 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும், ரூபா 38,414,995 தொகையான 02 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து எழுத்துமூல முன் அங்கீகாரமின்றி ஒன்பது நபர்கள் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டு சபை நிதியத்திலிருந்து ரூபா 855,943 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,959,401 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,871,558 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைவு ரூபா 2,912,157 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஆதனவரி

(அ) 2010 ஆம் ஆண்டின் இறுதி முதல் மீளாய்வாண்டின் இறுதிவரையான காலப்பகுதியில் ஆதனவரி நிலுவை வருமானம் ரூபா 2,010,809 தொடக்கம் ரூபா 4,669,363 வரை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆம் ஆண்டு மற்றும் 2012 ஆண்டின் இறுதியிலுள்ள நிலுவை ஆதன வரியை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் 11 சதவீதம் முதல் 17 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) 05 அரசாங்க நிறுவனத்திலிருந்து நிலுவை ஆதனவரியான ரூபா 209,639 தொகையை நீண்டகாலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 39,189,970 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்தில் புதிய கடைத்தொகுதியின் 06 கடைகளிலிருந்து ரூபா 580,350 தொகையான நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தையின் மாட்டிறைச்சிக் கடை 2013 ஆம் ஆண்டினைவிட 50 சதவீதத்தினால் வாடகை அதிகரிக்கப்பட்டு ரூபா 1,521,075 தொகையில் 2014 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்குவதற்கு 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட கூறுவிலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அந்தத் தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2014 சனவரி 17 ஆந் திகதி சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சகல கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்காை வருமானத்தை சபை இழந்திருந்தது.

(இ) பஸ் நிலைய பொது மலசலகூடம் 2013 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபையின் நலன்புரிச் சங்கத்திற்கு ரூபா 16,485 மாதாந்த வாடகைத் தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் உடன்படிக்கையின் 6 ஆம் பந்தியின் படி மாதாந்த நீர் மற்றும் மின்சாரப்பட்டியல்கள் உடன்படிக்கை செய்த சங்கத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 24,137 தொகையான மின்சாரக் கட்டணம் சபையினால் செுலுத்தப்பட்டிருந்ததுடன் நீருக்காக தனிப்பட்ட நீர்மாணியும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடுபுபுல ஓய்வகத்தில் 2012 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 31 வரை பல்வேறு வாடகையாளர்களுக்கு வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக மின்சாரக் கட்டணமாக ரூபா 14,289 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 12,444 தொகையான நிலுவை வாடகைக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பொதுச் சந்தையின் கடை வாடகை உடன்படிக்கையின் 1.4 ஆம் நிபந்தனையின் பிரகாரம் மாதத்தின் 10 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன் மாதாந்த வாடகை செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செலுத்தாத கடை உரிமையாளர்களிடமிருந்து நிலுவைக் கடை வாடகை மற்றும் தாமதக் கட்டணமான ரூபா 188,090 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 2,388,287 |
| முத்திரைக் கட்டணம் | 1,487,296 |

**2.2.4 ஏனைய வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் கனுல்வெல நகரத்தில் கடல் மீன் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 12,000 தொகை அறவிடப்பட்டிராததுடன் வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**2.3 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 16,287 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குரிய புறச்செயற்பாட்டுக் கட்டிடத்தில் அமைந்துள்ள 05 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன்களையும் வட்டியையும் மாதாந்தம் செலுத்துவதற்கிருந்த போதும் சபைக்கு வருமானத்தைப் பெறக்கூடிய ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய கடிதத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளுராட்சி நிறுவனங்களில் வீதி விளக்குகளை செயல்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமான சேவை வழங்குபவராக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாது மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 378,736 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் வீதி விளக்குகளை அமைக்கும் போது ஸ்தாபிக்கும் முறை, பொருத்தப்பட வேண்டிய விளக்குகளின் வகை, எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இந்த கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புறச்செயற்பாட்டுக் கட்டிடத்திற்கு உபகரணங்களை வழங்குவதற்காக குறிப்பிட்ட தனியார் கம்பனியுடன் ரூபா 4,411,143 தொகையான உடன்படிக்கையில் சபை 2013 யூன் 13 ஆந் திகதி கைச்சாத்திட்டிருந்தது. அதில் ரூபா 3,087,800 ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்தும், எஞ்சிய தொகை ரூபா 380,780 சபை நிதியத்திலிருந்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2012 மார்ச் 10 ஆந் திகதி கூறுவிலை கோரப்பட்டு குறைந்த விலையை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருக்கும் போது அந்த தீர்மானத்தை அமுல்படுத்தாது மீண்டும் கூறுவிலை கோரப்பட்டு சகல உபகரணங்களும் அந்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மாத்திரம் கையெழுத்திட்டிருந்தார்.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு புறம்பாக அனுமதியற்ற வகையில் நடாத்தப்பட்ட 13 கடைகள் தொடர்பாக 2014 மார்ச் 05 ஆந் திகதி வரையிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) புறச்செயற்பாட்டுக் கட்டிடத்தின் மேடைகளை அமைப்பதற்காக மரங்களை வெட்டுதல் மற்றும் மரக்குற்றிகளை கிழிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 235,925 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் பலாமரத்தை வெட்டுவதற்காக பெறப்பட்ட அனுமதிப்பத்திரம், மரங்களின் அளவு, உயரத்தைக் காட்டுகின்ற அறிக்கை, வெட்டப்பட்ட மரங்களின் அளவு மற்றும் எஞ்சிய மரங்களின் அளவு போன்ற விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2009 இன் மாகாண குறித்தொதுக்க மானியத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,484,376 தொகையும் சபை நிதியத்திலிருந்து ரூபா 94,915 தொகையான செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ரூபா 1,579,291 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் கூட்டுப்பசளை உற்பத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கழிவுகளை அகற்றும் செயற்பாடுகள் சுற்றாடலுக்குச் சாதகமான முறையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் மேலும் இந்த செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவைகள் துரிதமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்